ISSN:2583-2379



# மகிழ்ச்சியான குடும்ப உருவாக்கத்திற்கான இஸ்லாத்தின் அடிப்படைகளும் கோட்பாடுகளும் - ஓர் ஆய்வியல் அணுகுமுறை

**ஏ.எல்.எம். முஜாஹித்**
ஆய்வாளர்,
இஸ்லாமிய இயல் மற்றும் அரபு மொழி,
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும்
மூத்த விரிவுரையாளர், இஸ்லாமிய இயல் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ALM Mujahid**
Doctoral Candidate,
Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern University of Sri Lanka. &
Senior Lecturer,
Dept. of Islamic Studies, Eastern University, Sri Lanka.
Email: mujahidm@esn.ac.lk

**அகமது சர்ஜூன் ராசிக்**
பேராசிரியர்,
இஸ்லாமிய இயல் மற்றும் அரபு மொழி,
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

**Ahamed Sarjoon Razick**
Professor,
Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern University of Sri Lanka.
Email: sarjoonra@seu.ac.lk

## Abstract

This article explores how the family, as the fundamental unit of society, can be established with happiness and stability in light of Islamic teachings. Although family definitions vary according to cultural, social, and contextual factors, social science literature emphasizes that the family is the basic unit of society and a microcosm of human social life. This study integrates social science approaches with the perspectives of the Qur'an, Sunnah, and classical Islamic scholars to elucidate the Islamic foundations for a happy family life. The main objective of the study is to examine the theoretical and practical dimensions of the core Islamic principles that contribute to family happiness, including love (*mawaddah*), compassion (*rahmah*), tranquility (*sakina*), responsibility, consultation, patience, forgiveness, economic stability, and spiritual ethics. Furthermore, the study investigates the roles and responsibilities of family members—husband, wife, and children—and how these contribute to family cohesion and happiness. Specifically, the guiding role of the father, the emotional support of the mother, and the dutiful behavior of children are highlighted as essential for family stability. Moreover, the study emphasizes the exemplary family life of the Prophet (PBUH), showing that an Islamic family is not only a theoretical construct but also a practical, implementable model of living. Hadiths and Prophetic practices demonstrate that love, humor, mutual respect, and balance between husband and wife are central to a harmonious family life. This article concludes that a happy family is achieved only when Islamic spiritual values and social science principles are integrated. A family structured according to Islamic teachings provides a strong foundation that ensures both individual well-being and societal stability.

## Keywords:

Happy family, Islamic teachings, family members, parental responsibilities, child upbringing.

## ஆய்வுச்சுருக்கம்

இக்கட்டுரை குடும்பம் எனும் சமூகத்தின் அடிப்படை அலகு எவ்வாறு இஸ்லாமிய போதனைகளின் வெளிச்சத்தில் மகிழ்ச்சியுடனும் நிலைத்தன்மையுடனும் உருவாக்கப்படலாம் என்பதை கல்விசார் முறையில் ஆராய்கிறது. கலாசார, சமூக மற்றும் சூழலியல் காரணிகளால் குடும்ப வரையறைகள் மாறுபட்டாலும், குடும்பம் சமூகத்தின் மூலக்கூறு என்றும், மனித சமூகத்தின் சிறிதாக்கப்பட்ட வடிவம் என்றும் சமூக அறிவியல் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இவ்வாய்வு, சமூக அறிவியல் அணுகுமுறைகளையும் அல்குர்ஆன், ஸுன்னா மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களையும் ஒருங்கிணைத்து, மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கான இஸ்லாமிய அடிப்படைகளை விளக்க முயல்கிறது. ஆய்வின் முக்கிய நோக்கம் குடும்ப மகிழ்ச்சிக்கு இஸ்லாம் வலியுறுத்தும் அடிப்படைகளான அன்பு (மவத்தா), கருணை (றஹ்மா), அமைதி (சகீனா), பொறுப்பு, ஆலோசனை, பொறுமை, மன்னிப்பு, பொருளாதார சமநிலை, ஆன்மீக ஒழுக்கம் ஆகியவற்றை கோட்பாட்டு மற்றும் நடைமுறை நிலைகளில் பகுப்பாய்வு செய்வதாகும். இதனுடன் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய குடும்ப உறுப்பினர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் எவ்வாறு குடும்ப ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் உருவாக்குகின்றன என்பதும் ஆராயப்படுகிறது. குறிப்பாக, தந்தையின் வழிநடத்தல், தாயின் உணர்ச்சிசார் ஆதரவு மற்றும் பிள்ளைகளின் பணிவு ஆகியவை குடும்ப நிலைத்தன்மையில் வகிக்கும் பங்கு இவ்வாய்வில் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் நபி (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கையின் முன்மாதிரிகள் மூலம் இஸ்லாமிய குடும்ப வாழ்வு ஒரு கோட்பாட்டுச் சிந்தனையாக மட்டுமன்றி, நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய வாழ்வியல் மாதிரியாக இருப்பது வலியுறுத்தப்படுகிறது. ஹதீஸ்களும் நபிகளாரின் வாழ்க்கை நிகழ்வுகளும், கணவன்–மனைவி உறவுகளில் அன்பு, நகைச்சுவை உணர்வு, பரஸ்பர மரியாதை மற்றும் சமநிலையை உறுதிப்படுத்துகின்றன என்பதை இவ்வாய்வு காட்டுகிறது. இக்கட்டுரை மகிழ்ச்சியான குடும்பம் என்பது இஸ்லாமிய ஆன்மீக மதிப்பீடுகள் மற்றும் சமூக அறிவியல் கூறுகள் ஒருங்கிணையும் போது மட்டுமே நிலைபெறும் ஒரு சமூக நிறுவனம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் உருவாகும் குடும்ப அமைப்பு, தனிநபர் நலனையும் சமூக நிலைத்தன்மையையும் ஒருசேர உறுதி செய்யக்கூடிய ஒரு வலுவான அடித்தளமாக அமைகிறது என்பதே இவ்வாய்வின் கண்டறிதலாகும்.

**திறவுச் சொற்கள் :**

மகிழ்ச்சியான குடும்பம், இஸ்லாமிய போதனைகள், பெற்றோர் பொறுப்புகள், குழந்தை வளர்ப்பு.

## அறிமுகம்

குடும்பம் மனித சமூகத்தின் அடிப்படை அலகாக விளங்குவதோடு, தனிநபரின் பண்பாட்டு, ஒழுக்க மற்றும் ஆன்மீக உருவாக்கத்தில் தீர்மானமான பங்காற்றுகிறது. ஒரு சமூகத்தின் நிலைத்தன்மையும், நலனும் பெருமளவில் அதன் குடும்ப அமைப்பின் தரத்தையும் ஆரோக்கியத்தையும் சார்ந்ததாகக் காணப்படுகிறது. இத்தகைய சூழலில், மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை உருவாக்குவதற்கான வழிகாட்டல்கள் அனைத்துக் காலங்களிலும் மனித சமூகத்தின் முக்கிய ஆய்வுப் பொருளாக இருந்து வருகின்றன. குறிப்பாக, நவீன கால சமூக மாற்றங்கள், பொருளாதார அழுத்தங்கள் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் குடும்ப உறவுகளில் பல சவால்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், குடும்ப வாழ்வுக்கான தெளிவான வழிமுறைகளின் அவசியம் மேலும் வலுப்பெறுகிறது. இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் சமநிலை மிக்க வழிகாட்டுதலை வழங்கும் ஒரு முழுமையான வாழ்வியல் முறையாகும். அதில் குடும்ப வாழ்விற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் தனித்துவமானதாகும். அல்குர்ஆன், சுன்னாவின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இஸ்லாம் திருமணத்தை ஒரு புனித உடன்படிக்கையாகக் கருதி, அதன் மூலம் அன்பு, கருணை, பொறுப்பு, ஆலோசனை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகிய மதிப்பீடுகளின் மீது அமைந்த மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்குவதை வலியுறுத்துகிறது. இவ்வழிகாட்டுதல்கள் கோட்பாட்டு மட்டத்தில் மட்டுமன்றி, நடைமுறை வாழ்க்கையிலும் செயல்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளன.

இந்தப் பின்னணியில், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கான முன்மாதிரியாக விளங்குகிறது. கணவன், தந்தை, குடும்பத் தலைவர் என பல பாத்திரங்களில் அவர்கள் வெளிப்படுத்திய அன்பு, பொறுமை, நகைச்சுவை உணர்வு, கருணை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை இஸ்லாமிய குடும்ப வாழ்வின் நடைமுறை வடிவத்தை வெளிப்படுத்துகின்றன. குடும்ப வாழ்வையும் இறை வணக்கத்தையும் ஒன்றுக்கொன்று முரணானதாகக் கருதாமல், இரண்டையும் சமநிலையுடன் இணைத்துச் செயல்பட்ட நபிகளாரின் வாழ்க்கை, அனைத்துக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய

வழிகாட்டுதலாக அமைந்துள்ளது. எனவே, மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கான இஸ்லாத்தின் வழிகாட்டல்கள் எனும் மையக்கருத்தை உள்ளடக்கிய இவ்வாய்வு நபியவர்களின் குடும்ப வாழ்க்கை தொடர்பான போதனைகள், நடைமுறைகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் வெளிப்பட்ட குடும்ப உறவுச் சீர்மைகள் ஆகியவற்றை ஆராய்கிறது. இவ்வாய்வு, நபிகளாரின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகள் எவ்வாறு கணவன்–மனைவி உறவுகள், பெற்றோர்–பிள்ளைகள் தொடர்புகள் மற்றும் குடும்ப ஒற்றுமை ஆகியவற்றை வலுப்படுத்தி, ஒரு நிலையான மற்றும் மகிழ்ச்சியான குடும்ப அமைப்பை உருவாக்க உதவுகின்றன என்பதை தெளிவுபடுத்த முயல்கிறது. இதன் மூலம், நவீன சமூகச் சூழலில் இஸ்லாமிய குடும்ப மதிப்பீடுகளின் நடைமுறைப் பயன்பாடுகளை விளக்குவதற்கான ஒரு கல்விசார் அடித்தளத்தை இப்பகுதி வழங்குகிறது.

## குடும்பம்

குடும்பத்தை வரைவிலக்கணப்படுத்துவது கலாசார, சமூக மற்றும் சூழல்களைப் பொறுத்து மாறுபடும். ஒரு குடும்பம் என்பது பிறப்பு, திருமணம் அல்லது தத்தெடுப்பு மூலம் ஒன்றாக வாழும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் குழுவாகும். அத்தகைய தொடர்புடைய நபர்கள் அனைவரும் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களாகக் கருதப்படுகிறார்கள். இது கணவன்-மனைவி அவர்களது பிள்ளைகள் சேர்ந்து வாழும் சிறிய சமூக அலகைக் குறிக்கிறது. அது இரத்த உறவாலோ அல்லது திருமண உறவாலோ சட்டபூர்வமான முறையில் அமைந்த ஓர் உறைவிடக் குழுவாகும். அனைத்துலக மனித உரிமை சாசனத்தின் 16 (3) விதிப்படி 'குடும்பம்' என்பது சமூகத்தின் இயல்பானதும், அடிப்படையானதுமான ஒரு அலகாகும் என்பதோடு அது சமூகத்தாலும், தேசத்தாலும் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் மூலக்கூறு எனவும் அது மானிட சமூகத்தின் சிறிதாக்கப்பட்ட வடிவம் எனவும் கூறப்படுகின்றது (Sukeera> 2014).

குடும்பம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான திருமண உறவின் மூலம் உருவாக்கப்பட்ட சமூகத்தை நிரப்புவதற்காக கருதப்படும் ஒரு குழுவாகும்.

பின்னர், ஒவ்வொருவரும் கணவன், மனைவியின் மூலம் வலுவான உறவைக் கொண்ட குழந்தைகளால் ஆசிர்வதிக்கப்படுகிறார்கள் (Wahbah al-Zuhayli. 2005). குடும்பம் என்பது ஆண்களையும் பெண்களையும் ஒன்றாக வாழத் தூண்டும் ஒரு சமூகக் குழுவாகும். மேலும், அது இனப்பெருக்க செயல்முறை மற்றும் பரஸ்பர தொடர்பை வலியுறுத்துகிறது (Sri Lestari, 2012). இந்த உலகில் தனிநபர்கள் இல்லை, குடும்பங்களின் சிதைவடைந்த துண்டுகள் மட்டுமே என்று அடிக்கடி கூறப்படுகின்றது (Segrin & Flora, 2005). குடும்பம் ஒரு நல்ல சுபீட்சமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் என நம்பப்படுகின்றது. இது நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும். சமூகத்தின் அடித்தளம் குடும்பமாகையால் அடித்தளம் எவ்வளவு பலமானது அல்லது பலவீனமானது என்பது குடும்பத்தின் வளர்ச்சியைப் பொறுத்ததாகும் (Syaltut, 1978).

## மகிழ்ச்சியான குடும்பத்திற்கான இஸ்லாத்தின் வழிகாட்டல்கள்

சமூக அமைப்பு ஆரோக்கியமாகவும் நிலையானதாகவும் இருக்க வேண்டுமெனில், குடும்ப வாழ்க்கை சீராக இயங்க வேண்டும். இஸ்லாம் குடும்பத்தை மகிழ்ச்சியுடனும் நிலைத்தன்மையுடனும் உருவாக்குவதற்கான பல்வேறு போதனைகளை வழங்குகிறது. அல்குர்ஆன், ஹதீஸ் வழியாக வழங்கப்படும் இவை, முஸ்லிம் குடும்பங்களுக்கான முழுமையான வழிகாட்டுதலாகக் கருதப்படுகின்றன. ஆய்வாளர்கள் மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்கும் இஸ்லாமிய போதனைகளை ஆராய்ந்து அன்பு, கருணை, பொறுப்பு, ஆலோசனை, பொறுமை, பிரார்த்தனை ஆகியவை குடும்ப நலனிலும் மகிழ்ச்சியிலும் முக்கிய பங்கு வகிப்பதை வலியுறுத்துகின்றனர் (Yusuf> 2018). அல்குர்ஆனில் "அவன் உங்களுக்காக உங்களிலிருந்தே துணைவியரை படைத்தான். நீங்கள் அவர்களிடத்தில் அமைதியை அடையும்படி மேலும் உங்களுக்குள் அன்பையும் கருணையையும் வைத்தான்" (30:21) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் திருமணம் ஒரு வலுவான உடன்படிக்கை என விளக்கப்படுகிறது. பல்வேறு ஆய்வுகள் ஆன்மீக அடிப்படையில் உருவான உறவுகள் நீண்டகால மகிழ்ச்சியை

ஏற்படுத்துகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றன. அதேபோல் இமாம் கஸ்ஸாலி (றஹ்) தனது இஹ்யா உலூமுத்தீன் என்ற நூலில் கணவன் – மனைவி உறவுகள் பரஸ்பர கருணை மற்றும் அன்பு அடிப்படையில் அமைய வேண்டும் என வலியுறுத்துகின்றார். குடும்பத்தில் அன்பும் உணர்ச்சி ஆதரவும் அதிகமாக இருக்கும் போது குழந்தைகளின் உளவியல் வளர்ச்சி நேர்மறையாகக் காணப்படும்.

இஸ்லாத்தின் பார்வையில் நல்லொழுக்கம், நன்னடத்தைகள் ஆகியவை மகிழ்ச்சியான குடும்ப வாழ்வின் முக்கிய அங்கமாகக் கருதப்படுகின்றன. நபி (ஸல்) அவர்கள் “உங்களில் சிறந்தவர் தங்கள் குடும்பத்தாருக்கு சிறந்தவர்களே” (சுனன் திர்மிதி : 3895) என்று கூறிய ஹதீஸ் குடும்ப உறவுகளில் நன்னடத்தை முக்கியம் என்பதை வலியுறுத்துகின்றது. குடும்பத்தில் மதிப்பும் மென்மையான வார்த்தைகளும் பயன்படுத்தப்படும் சூழலில் கணவன்-மனைவியின் உறவுகள் ஆரோக்கியமாக நீடிப்பதாகக் கூறப்படுகிறது. கணவன் குடும்பத்தின் பொருளாதாரப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியது, மனைவி குடும்ப பராமரிப்பில் பங்கு வகிக்க வேண்டியது மகிழ்ச்சியான குடும்பத்தின் முக்கிய கூறாகும். பொறுப்புகள் சரியாக பங்கிடப்பட்டு, கடமைகள் முறையாக நிறைவேற்றப்படும் போது குடும்பங்களில் விவாகரத்து விகிதம் குறைவாக இருப்பதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவிக்கிடையிலான ஆலோசனை முக்கியத்துவம் பெறுகிறது. அல்குர்ஆன் “அவர்கள் தங்கள் காரியங்களை ஆலோசனையின் மூலம் நடத்துகிறார்கள்” (அல்குர்ஆன் 42:38) எனக் குறிப்பிடுகின்றது. கணவன் - மனைவி இருவரும் ஆலோசித்து முடிவெடுக்கும் குடும்பங்களில் முரண்பாடுகள் குறைவதும், புரிதல் அதிகரிப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல், பொறுமையும் மன்னிப்பும் குடும்ப நலனில் அத்தியவசியமாகின்றன. நபியவர்கள் குடும்ப உறவுகளோடு பொறுமையையும் மன்னிப்பையும் கடைப்பிடித்ததற்கான பல சான்றுகள் ஹதீஸ்களில் காணப்படுகின்றன. மன்னிக்கும் இயல்பு அதிகம் காணப்படும் குடும்பங்களில் உளவியல் அழுத்தம் குறைவாகக் காணப்படும்.

மகிழ்ச்சியான குடும்ப உருவாக்கத்தின் மற்றொரு முக்கிய அடிப்படை மார்க்கக் கல்வியை குடும்பங்களில் வலியுறுத்துவதாகும். பெற்றோர் குழந்தைகளுக்கு வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களை தங்களது வீட்டுச் சூழலிலும் அதற்குரித்தான கல்வி நிலையங்களிலும் வழங்குவது கடமையாகும். மார்க்க அடிப்படையிலான கல்வியை பெற்ற குழந்தைகள் அதிகமான சமூக பொறுப்புணர்வும் நற்பண்புகளும் கொண்டவர்களாக வளர்கின்றனர்.

நிலையான, நிறைவான பொருளாதாரம் மகிழ்ச்சியான குடும்ப உருவாக்கத்தில் மிக முக்கிய பங்காற்றுகின்றது. பொருளாதார முகாமைத்துவம் குறித்து, அல்குர்ஆன் வீணாக செலவிடுவதைத் தவிர்க்குமாறு வலியுறுத்துகிறது. “மேலும் உறவினர், வறியோர், வழிப்போக்கர் ஆகியோரின் உரிமையை வழங்குவீராக, வீண்விரயம் செய்ய வேண்டாம். நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாவர்” (17:26–27). பொருளாதார முகாமைத்துவம் திறமையாக நடைபெறும் குடும்பங்களில் சண்டைகள் மற்றும் பதற்றங்கள் குறைவடைந்து ஒரு நிறைவான வாழ்க்கைக்கு அது வழிவகுக்கும்.

அதேசமயம், மகிழ்ச்சியான குடும்ப வாழ்வின் ஆன்மீக அடித்தளமாக பிரார்த்தனை வலியுறுத்தப்படுகிறது. அல்குர்ஆனில் “எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண் குளிர்ச்சியை அளிப்பாயாக!” (25:74) என்று பிரார்த்தனை செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பிரார்த்தனை மற்றும் ஆன்மீக பழக்க வழக்கங்கள் அதிகமாக இருக்கும் குடும்பங்களில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும். இவ்வாறு, ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளும் அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸின் போதனைகளும் மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்களை ஒருமித்துக் காட்டுகின்றன.

## மகிழ்ச்சியான குடும்பத்திற்கான அடிப்படைகள்

மகிழ்ச்சியான குடும்பம் என்பது திருமணமான ஒவ்வொரு தம்பதியினரும் அடைய விரும்பும் இலக்காகவும், அல்லாஹ்வினால் அருள்பாலிக்கப்பட்ட வாழ்க்கைத்

திட்டமாகவும் காணப்படுகின்து. ஒரு முன்மாதிரியான குடும்பத்தில் தாய், தந்தை மற்றும் குழந்தைகளின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புரிதல்கள் ஒரு மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்க வழிவகுக்கின்றன. இவ்வாறான மகிழ்ச்சியான குடும்பத்தை ஸ்தாபிப்பதற்கு நீண்ட காலம் தேவைப்பட்டாலும் தற்போதைய சாவல்களை எதிர்கொள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு உன்னதமான விழுமியங்களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதன் மூலம் இதனை சாத்தியப்படுத்தலாம். திருமணம் என்பது இஸ்லாத்தின் அடிப்படை விழுமியங்களின் அடிப்படையில் மகிழ்ச்சியான குடும்பத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட கணவன்-மனைவியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு வலுவான கூட்டுறவாகும் (Ahid, 2010). திருமண முன்னேற்றம் என்பது கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியாக இருப்பதோடு ஒருவரையொருவர் மகிழ்விப்பதிலும் தங்கியிருக்கின்றது (Weiss et al., 2018). திருமணம் மற்றும் மகிழ்ச்சியான குடும்பத்தை அடைவதற்கான எந்தவொரு முயற்சியும் ஷரீஅத்தின் விதிமுறைகளால் வடிவமைக்கப்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்களின் நலன், வளர்ப்பு, ஆரம்பக் கல்வியை வழங்குவதில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது. குழந்தை பராமரிப்பு, வளர்ப்பு, சமூக கலாசாரம் ஆகிய அனைத்துக்கும் குடும்பம் பொறுப்பேற்றுக் கொள்கின்றது (Fahrudin, 2012). ஒரு முன்மாதிரியான குடும்பம் என்பது சமூகத்திற்கு குடும்ப உறுப்பினர்களின் நல்ல மற்றும் உயர்ந்த குணத்தின் மூலம் முன்மாதிரியாகத் திகழ்வதாகும். மகிழ்ச்சியான குடும்பம் என்பது கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், பேரக்குழந்தைகள், உறவினர்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிந்து செயல்படும் ஒரு சமூகக் குழுவாகும் (Zuhdi, 2008). காலம் என்பது ஒரு திருமணம் அப்படியே இருக்கும் வருடங்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. திருப்தி என்பது ஒவ்வொரு தம்பதியரும் தங்கள் உறவுகளில் உள்ள மகிழ்ச்சி, மன நிறைவு மற்றும் அன்பை உணரும் அளவைக் குறிக்கின்றது (Hendrick, 1988).

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் சிறந்த குடும்பம் சகீனா, மவத்தா, றஹ்மா என்ற உணர்வுகளைக் கொண்டிருக்க வேண்டும். இது மகிழ்ச்சியைப் பெறுதல்,

ஆசீர்வதிக்கப்படுதல், முழுமையாக நேசித்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. பல பெண்கள் தங்களது மனைவி, தாய் என்ற கடமையை மறந்து குடும்பத்திற்கு வெளியே தங்களது மகிழ்ச்சியைத் தேடுகின்றனர். குறைஷ் ஷிஹாப் திருமண வாழ்வின் மகிழ்ச்சியை அளவிட ஏழு விடயங்கள் உள்ளன என்று விளக்குகிறார் :

1. நேர்மையும் விசுவாசமும் தம்பதியினரின் முக்கிய அடிப்படைக் கொள்கைகளாக இருக்கும் போது
2. அல்லாஹ்வின் அருளால் இருவரும் வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் இருக்கும் போது
3. துணையுடைய சுக, துக்கங்களில் முழுமையாக பங்கேற்க விரும்பும்போது
4. துணையிடமிருந்து பரஸ்பரம் கவனத்தையும் சேவையையும் கொடுக்கவும் பெறவும் விரும்பும்போது
5. ஒவ்வொரு நாளும் உறங்கும் போது கெட்ட நினைவுகளை விட பல இனிமையான நினைவுகள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் போது
6. துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பதற்கு முன் அமைதியையும் இன்பத்திற்கு முன் மகிழ்ச்சியையும் சாந்தியையும் சுவையான உணவுக்கு முன் சந்தோஷத்தையும் உணரும்போது
7. என் வாழ்வின் இறுதி வரைக்கும் என் மரணத்திற்குப் பிறகும் நான் இவருடன்தான் வாழ வேண்டும் என இதயம் கூறும்போது (Ceria, 2020)

அபூஸஹ்வா, அஹமட் ஹைகல் ஆகியோர் தங்களது நூலின் முகவுரையில் வெற்றிபெற்ற, மகிழ்ச்சியான குடும்பத்தை அடைவதற்கு பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றனர்.

1. கணவன், மனைவி, குழந்தைகளுக்கிடையேயான உறவுகள் உரையாடல், பரஸ்பர புரிதலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டால் மகிழ்ச்சி தோன்றும்
2. அல்லாஹ்வை திக்ர் செய்பவர்கள், பாவங்களிலிருந்து தங்களை தூய்மைப்படுத்த முயற்சிப்பவர்கள், அன்றாடம் தொழுகையை நிறைவேற்றுபவர்கள்,

ஏழைகளுக்கு ஸதகா செய்கின்றவர்கள் இருக்கும் இல்லம் ஒரு சிறந்த இல்லமாகும்.

3. கருணையை நினைவூட்டுபவர்களாகவும் இழிவானவர்களிடமிருந்து தங்களை தூரப்படுத்திக் கொண்டவர்களுமான கணவனும் மனைவியும் இருக்குமிடம்.
4. தொழுகையையும் பொறுமையையும் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு தனது குடும்பத்தை நினைவூட்டும் குடும்பத் தலைவன்.
5. கணவனும் மனைவியும் தமது குழந்தைகளின் கல்வியில் இஸ்லாமிய போதனைகளைக் கடைப்பிடிக்கச் செய்தல் (Ceria, 2020).

திருமண வாழ்வில் மகிழ்ச்சியாகவும் திருப்தியுடனும் இருக்கும் தம்பதிகளின் மகிழ்ச்சிக்குரிய காரணங்களை அறிவதற்காக ஈரானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மகிழ்ச்சியான தம்பதிகள் தங்களது வெற்றிகரமான குடும்ப வாழ்விற்கான காரணிகளை பின்வருமாறு விபரித்தனர்.

1. நாங்கள் ஒருவரையொருவர் நம்பி உறுதியுடன் இருக்கின்றோம்.
2. நாங்கள் ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்கின்றோம்.
3. எங்களது உறவு நெருக்கமானது என நினைக்கிறோம்.
4. எங்கள் சொந்தப் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்கின்றோம்.
5. குழந்தைகளை வளர்ப்பதில் நாங்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கின்றோம்.
6. நாங்கள் பொதுவான நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.
7. நாம் ஒருவருக்கொருவர் அன்பை வெளிப்படுத்துகின்றோம் (Daneshpour, et al., 2011).

வெற்றிகரமான குடும்ப வாழ்க்கை என்பது இரண்டு நபர்கள் தங்கள் மதிப்புகள், கொள்கைகளை முழு மனதுடன் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதாகும். அதில் பரஸ்பர நலன்கள், அர்ப்பணிப்பு உணர்வு, எந்த சூழ்நிலையிலும் ஒன்றாக இருக்க முடிவு செய்து மற்றவருடன் ஒத்துழைத்தல் போன்றவை காணப்படும் (Gardner, et al., 2004). ஆழமான, அரை கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களின் தரவைப் பயன்படுத்தி

வெற்றிகரமான திருமணங்கள், குடும்பங்கள் பின்வருமாறு சுயமாக விபரிக்கப்படுகின்றன.

1. நாங்கள் ஒருவருக்கொருவர் வேறுபாடின்றி சமமாகப் பழகிக் கொள்கின்றோம்.
2. நாங்கள் ஒருவரையொருவர் விரும்புகின்றோம்.
3. நாங்கள் வளர்ந்தவர்கள் அல்லது முதிர்ச்சியடைந்தவர்கள்
4. நாங்கள் நண்பர்கள்
5. நாங்கள் அதிஷ்டசாலிகள்
6. நாங்கள் நகைச்சுவையுடன் பழகுகின்றோம்
7. எங்களிடம் வலுவான சுய புரிந்துணர்வு உள்ளதுடன் அதில் உறுதியுடன் இருக்கின்றோம்.
8. நாங்கள் சிறந்த தொடர்பாடலுடன் இருக்கின்றோம். (Daneshpour, et al., 2011)

சகீனா என்பது இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையில் கணவன்-மனைவியிடையே இயற்கையான உள்ளார்ந்த பாசத்தின் வளர்ச்சியுடன் உருவாக்கப்பட்ட திருமணமாகும். சகீனா குடும்பம் அல்லாஹ்வுடனான வலுவான தொடர்பு, அன்பு, பரஸ்பர வெளிப்படைத்தன்மை, மரியாதை, நல்ல தொடர்பாடல், சகிப்புத்தன்மை, மன்னிப்பு, நேர்மை, நன்றியுணர்வு ஆகியவற்றால் சிறப்புற்று விளங்குகின்றது. குடும்பத்தில் ஸகீனா குடும்பத்தைச் சாத்தியமாக்க கணவன் - மனைவியிடையே ஒரு வலுவான உள்பிணைப்பு மூலம் ஒரு கூட்டு செயல்முறை தேவைப்படுகிறது.

மலேசியாவில் முன்மாதிரியான குடும்ப உருவாக்கத்திற்கான விருதைப் பெறும் குடும்பங்களின் பண்புகளை Islamic Dakwah Foundation Malaysia பின்வரும் ஐந்து விடயங்களை அளவுகோலாகக் கொண்டு விபரிக்கின்றது.

### பாராட்டும் போற்றுதலுக்குமுரிய அர்ப்பணிப்புள்ள, ஆளுமையான, பக்தியுள்ள குடும்பம்

அல்குர்ஆன், சுன்னாவால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இஸ்லாத்தின் போதனைகளை நெருக்கமாகப் பின்பற்றும் ஒரு குடும்பத்தை இது குறிக்கின்றது. குழந்தைப் பருவத்திலிருந்தே அல்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய கல்வியை ஊட்டும் பெற்றோர்கள். அதுமட்டுமல்லாமல் இந்தப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இருப்பதுடன் தங்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் பாராட்டத்தக்க சுய அடையாளத்தையும் கொண்டிருப்பர்.

### கல்வியில் சிறந்து விளங்கி, குறிப்பிட்ட துறையில் வெற்றி பெற்று சமூகம், மதம், இனம், நாட்டிற்கு தமது சேவையை வழங்கும் ஒரு குடும்பம்

இது தாயாகவோ, தந்தையாகவோ அல்லது அவர்களின் சந்ததியினராகவோ இருந்தாலும் தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்று இருக்கும் குடும்ப உறுப்பினர்களைக் குறிக்கிறது. பெற்றோரின் தொழில்களில் பெற்ற வெற்றி பிள்ளைகளுக்கு மிகவும் உறுதியான வாழ்க்கையைப் பெற உதவுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. முன்மாதிரியான குடும்பங்கள் தங்கள் வீட்டிற்கு அருகில் வசிக்கும் அண்டை வீட்டாரின் நலனில் அக்கறை கொள்வதோடு சமூகத்துடன் இணைந்து தொண்டு நடவடிக்கையில் ஈடுபட்டு, சமூகத்திற்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குகின்றனர். முன்மாதிரியான பெற்றோர்கள் எப்போதும் வேலைப்பழுவோடு இருந்தாலும் எந்த வெகுமதியையும் எதிர்பாராமல் தன்னார்வத்துடன் தொண்டு செய்ய தங்களது நேரத்தை ஒதுக்குவர். அத்தோடு முன்மாதிரியான குடும்பங்களின் சந்ததியினர் தங்கள் கல்வியில் சிறந்து விளங்கி அரசு அல்லது தனியார் துறைகளில் நல்ல பதவிகளைப் பெற்று சமூகத்தில் தங்கள் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதால் பொதுமக்களுக்கான அவர்களின் அர்ப்பணிப்பு, பாராட்டத்தக்க அணுகுமுறைகளுக்காக அவர்கள் சமூகத்தால் நன்கு விரும்பப்படுகிறார்கள்.

**பரஸ்பரம் குடும்ப உறவுகளை நல்லமுறையில் பேணும் இணக்கமான, முரண்பாடற்ற குடும்பம்**

குடும்ப உறவுகளின் ஒற்றுமையை வலியுறுத்தும் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தை இது குறிக்கும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மற்றும் உறவினர்களுடனான உறவை எப்போதும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். குடும்ப உறுப்பினர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு சகிப்புத்தன்மையோடு புத்திசாலித்தனமாகத் தீர்த்துக் கொள்வார்கள். முன்மாதிரியான பெற்றோர் தங்களது குழந்தைகளுடன் பேசும் போது நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளையே பயன்படுத்துவதோடு குழந்தைகளையும் அவ்வாறே பயிற்றுவிப்பர்.

**சமூகத்திலுள்ள ஏனைய குடும்பங்களுக்கு முன்மாதிரியான குடும்பம்**

மகிழ்ச்சியாகவும் உள்ளக முரண்பாடுகளிலிருந்து விடுபட்டவர்களாகவும் கல்வியில் வெற்றியடைந்தவர்களாகவும் அனைத்து விடயங்களிலும் சமூகத்திற்கு முன்மாதிரியாகவும் இருக்கும் அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தை இது குறிக்கின்றது. அந்தக் குடும்பத்தில் மரணந்தான் பிரிவினையை ஏற்படுத்துமே தவிர முரண்பாடுகளோ, விவாகரத்துகளோ கிடையாது. தாய், தந்தை அவர்களது பிள்ளைகள் என அனைவரும் தமது சொந்த குடும்பம், சமூகம், நாடு என அனைத்து அம்சங்களிலும் பொதுமக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வார்கள்.

**அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடக்கக்கூடிய மலேசிய குடியுரிமை பெற்ற முஸ்லிம் குடும்பம்**

இது மலேசிய குடியுரிமை பெற்ற தாய், தந்தை மற்றும் குழந்தைகள் ஆகியோரைக் கொண்ட குடும்பத்தைக் குறிக்கும். அவர்கள் அல்குர்ஆன், சுன்னாவை தங்கள் வாழ்வின் நெறியாகக் கொள்வதோடு அல்லாஹ்வின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தும் அவன் தடைசெய்தவற்றில் இருந்து விலகியும் இருப்பார்கள் (Ismail et al., 2015).

இக்கருத்தின் படி, மகிழ்ச்சியான குடும்பத்தில் இறைபக்தி, கல்வி, இரத்த உறவைப் பேணல், முன்மாதிரி, தேச உணர்வு என்பன காணப்படும். மகிழ்ச்சியான குடும்பம் என்பது குடும்ப உறுப்பினர்களுடன் இருக்கும் போது இனிமை, அமைதி, தாராளத்தன்மை, ஆறுதல், நிம்மதி ஆகியவற்றை அனுபவிக்கும் ஒரு நிறுவனமாகும். இஸ்லாம் காட்டும் வழிமுறைகளைப் பின்பற்றும் போதெல்லாம் இந்த மகிழ்ச்சி உணரப்படுகின்றது. கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் தங்கள் பொறுப்புக்களைச் சிறப்பாகச் செய்வதே இந்த மகிழச்சியான குடும்பத்தை நிறுவுவதற்கு அடிப்படையான காரணியாகும். இவைகளுள் பெற்றோர் பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பெற்றோருக்கும் செய்ய வேண்டிய பொறுப்புகளும் அடங்கும். நபியவர்கள் தமது குடும்ப வாழ்வில் செயற்பட்டதை முன்மாதிரியாகக் கொண்டு ஒவ்வொரு தம்பதியினரும் செயற்பட வேண்டும். உணவு தயாரித்தல், வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்ளல், ஏனைய விடயங்களிலும் தனது மனைவிமாருக்கு ஒத்தாசையாக இருத்தல் போன்ற விடயங்களில் நபியவர்கள் முன்மாதிரியாக செயற்பட்டு அவர்களுக்குரிய உரிமைகளை முறையாக வழங்குவதிலும் கவனமாக இருந்தது போல் செயற்படுதல்.

## மகிழ்ச்சியான குடும்பத்தைக் கட்டியெழுப்புவதில் குடும்ப உறுப்பினர்களின் வகிபாகம்

ஒவ்வொரு முன்மாதிரியான குடும்பமும் தாய், தந்தை மற்றும் குழந்தைகளை உள்ளடக்கியதாகும். எனவே அக்குடும்பத்திலுள்ள அனைவரும் மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். முன்மாதிரியான குடும்ப உறுப்பினர்களின் முக்கிய பணி தங்களது குழந்தைகளுக்கு தரமான, சிறந்த கல்வியை வழங்குவதாகும். எனவே பெற்றோர்கள் தமக்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்றுவதற்காக திருமண வாழ்க்கைக்குள் நுழைவதற்கு முன்னரே இது தொடர்பான அறிவையும் விழிப்புணர்வையும் பெற்றிருப்பது அவசியமாகும். உதாரணமாக ஒரு தாய் தனது குழந்தைகளை வளர்க்கும் போது அவர்களுக்குத் தேவையான போதுமான அன்பையும் பாசத்தையும் வழங்குவது அவளின்

பொறுப்பாகும். அவள் தனது குழந்தைகளுக்காகச் செலவழிக்கும் நேரம், ஆற்றல் காரணமாக அவளுக்கும் குழந்தைகளுக்குமிடையிலான உறவு எப்போதும் நன்றாகவும் நெருக்கமானதாகவும் காணப்படும். எனவே இவை தொடர்பான விடயங்களை அவள் திருமண வாழ்வை ஆரம்பிக்க முன்னரே அறிந்திருப்பது அவள் ஒரு முன்மாதிரியான தாயாக மிளிர்வதற்கு துணையாக அமையும்.

முன்மாதிரியான பெற்றோர்கள் அல்குர்ஆன், சுன்னாவின் வழிகாட்டலில் தங்களது குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வியைக் கற்பிப்பதோடு கலைகள், கணிதம், வரலாறு, மொழிகள் போன்ற உலகக் கல்வியையும் போதிப்பார்கள். எனவே அவர்கள் தங்களது குழந்தைகளுக்கு விரிவான மார்க்கக் கல்வியை வழங்குவதில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதனால் குழந்தைகளது வாழ்க்கை அருவருப்பான, தீய செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்றது. இந்தப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் இளவயது முதலே அல்குர்ஆன் ஓதுதல், புரிந்து கொள்ளுதல், அதனை வாழ்க்கையில் கடைப்பிடித்தல் போன்ற விடயங்களில் மிகவும் கண்டிப்பானவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருப்பார்கள். மகிழ்ச்சியான, இணக்கமான தனிநபர்களையும் குடும்பங்களையும் சமூகத்தையும் உருவாக்குவதில் ஒரு முன்மாதிரியான குடும்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களின் மகிழ்ச்சியான போக்கு அவ்வுறுப்பினர்களுக்கு தமது குடும்பம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. அன்பு, பாசத்தின் அடிப்படையில் மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்குவதற்கு முன்மாதிரியான குடும்பத்தின் அளவுகோல்ளை ஆராய்வது மகிழ்ச்சியான குடும்பத்தை உருவாக்க வழிகோலும். இவ்வாறு உருவாக்கப்படும் போது குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் தாங்கள் மற்றவர்களால் நேசிக்கப்படுவதாகவும் பாராட்டப்படுவதாகவும் உணர்வார்கள்.

புத்திசாலியான பெற்றோர்கள் தங்கள் நேரத்தை முறையாக நிர்வகித்து, தமது பிள்ளைகளுடன் செலவழிக்க வேண்டிய நேரத்தை அவர்களுக்காக ஒதுக்கி, தங்கள் குழந்தைகளுடன் இரு தரப்பு உறவை வலுப்படுத்திக் கொள்வார்கள். அவர்கள் ஆரோக்கியமான தொடர்புகளைப் பேணுவதன் மூலம் ஒருவருக்கொருவர் உதவி செய்து,

மரியாதை செய்து குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்க சூழலை உருவாக்க முடியும். இவ்வாறான செயற்பாடுகள் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலும் ஒரு வலுவான பிணைப்பை ஏற்படுத்தவல்லது. முன்மாதிரியான பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு ஆராய்ந்து நல்ல முறையில் செவிசாய்ப்பவர்களாக மாறுவதன் மூலம் குடும்பத்தில் நல்ல உறுப்பினர்களை உருவாக்க முடியும்.

## குடும்பத் தலைவர் என்ற வகையில் தந்தை

குடும்பத்தின் தலைவராக தந்தை விளங்குவதால், அவர் தனது மனைவிக்கும் குழந்தைகளுக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டியராவார். தனது பேச்சு, நடத்தை, அணுகுமுறை ஆகிய அனைத்திலும் நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வதே ஒரு சிறந்த தந்தையின் அடையாளமாகும். அவர் குடும்ப நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டவராக இருப்பதோடு, தனது மனைவி மற்றும் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக விடாமுயற்சியுடன் உழைத்து, பிறரின் உதவியை எதிர்பாராமல் அவர்களுக்குரிய ஜீவனாம்சத்தையும் உரிமைகளையும் வழங்குபவராக இருக்க வேண்டும். தன் குடும்பத்தை முறையாக வழிநடத்த வேண்டும் என விரும்பும் தந்தை, அதனை அறிவுப்பூர்வமான அணுகுமுறையுடன் மேற்கொள்ளுதல் அவசியமாகும். ஏனெனில், அறிவுசார் வழிகாட்டுதலே மனைவியும் குழந்தைகளும் தந்தையின் மூலம் சிறந்த படிப்பினைகளைப் பெற உதவுகின்றது. குறிப்பாக, மார்க்கக் கல்வியை தொடர்ச்சியாக வழங்குவது குழந்தை வளர்ப்பில் மிக முக்கியமான அம்சமாகும். அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்காக மனைவி மற்றும் குழந்தைகளைச் சரியான பாதையில் வழிநடத்துவது இக்கல்வியின் மைய நோக்கமாக இருக்க வேண்டும்.

மேலும், ஒரு தந்தை தனது குழந்தைகளின் உடல், உள வளர்ச்சியைச் சரியாகப் புரிந்து கொண்டு, அவர்களுக்கு பொருத்தமான வழிகாட்டுதலை உரிய நேரத்தில் வழங்கினால், அது அவர்களை தீய செயல்கள் மற்றும் பாவங்களிலிருந்து பாதுகாக்கும்

முக்கியக் காரணியாக அமையும் (Baba, 2010). முன்மாதிரியான தந்தை, தனது ஆண், பெண் குழந்தைகளுக்கு சமமான பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்துவதன் மூலம், தன் நியாயமான, பக்கசார்பற்ற தன்மையை வெளிக்காட்ட வேண்டும். அத்துடன், அவர் கெட்ட காரியங்களில் இருந்து விலகி வாழ்தல், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடத்தல், பெற்றோர், சமூகம் மற்றும் நாட்டிற்கான கடமைகளை உணர்ந்து செயல்படல் போன்ற உயரிய பண்புகளை குழந்தைகளில் வளர்க்கும் வகையில் செயல்பட வேண்டும். தனது குழந்தைகளின் நலனுக்காக எப்போதும் பிரார்த்தனை செய்பவராகவும், அவர்களுக்கு ஊக்கமும் தைரியமும் அளிப்பவராகவும் தந்தை திகழ்வதே, ஒரு சிறந்த குடும்பத்தை உருவாக்கும் அடித்தளமாக அமைகிறது.

## குடும்ப உறவை வலுப்படுத்துபவள் என்ற வகையில் தாய்

ஒரு முன்மாதிரியான தாய், குடும்ப வாழ்வில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்கச் செய்வதற்காக அறிவுப்பூர்வமானதும் புத்திசாலித்தனமானதுமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய பொறுப்புடையவராகக் காணப்படுகிறார். குடும்பம் என்பது உணர்வுகள், அன்பு, பரஸ்பர புரிதலால் கட்டியெழுப்பப்படும் ஒரு அடிப்படைச் சமூக அலகாக இருப்பதனால், தாயின் அணுகுமுறை குடும்ப சூழலை நேரடியாகவே தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. ஆகவே, குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதற்காக நவீன காலத்திற்கேற்ற தொழில்நுட்ப உபகரணங்களைச் சீராகவும் பொறுப்புடனும் பயன்படுத்தி, குழந்தைகளுடன் தொடர்ச்சியான தொடர்பாடலைப் பேணுதல் அவசியமாகிறது. கணவனுடன் முறையான, மரியாதை மிக்க மற்றும் வெளிப்படையான தொடர்பாடலைப் பேணுவது குடும்ப ஒற்றுமையை உறுதிப்படுத்துவதோடு, குழந்தைகளுக்குச் சிறந்த முன்மாதிரியாகவும் விளங்குகிறது. தாய், தந்தைக்கு இடையிலான பரஸ்பர புரிதலும் ஒத்துழைப்பும் குழந்தைகள் தங்களது கடமைகள் மற்றும் பொறுப்புகளை உணர்ந்து நிறைவேற்றுவதற்கான மனப்பாங்கை உருவாக்க உதவுகின்றது. இவ்வகையான இணக்கமான குடும்ப நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்காக, ஒரு முன்மாதிரியான தாய் நபி (ஸல்) அவர்களின்

போதனைகளையும் நடைமுறைகளையும் வாழ்க்கையில் வழிகாட்டுதலாகக் கொண்டு செயல்படுதல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

மேலும், குடும்ப உறுப்பினர்களுடன் பழகும் போது உடல் ரீதியான நோவையோ, மனவருத்தத்தையோ, வெறுப்புணர்வையோ ஏற்படுத்தாத மென்மையான அணுகுமுறை குடும்பத்திற்குள் சுமூகமான உறவுகளையும் பரஸ்பர மரியாதையையும் வளர்க்கும். அன்பு, பொறுமை, கருணை மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளை தனது நடத்தை மூலம் வெளிப்படுத்தும் தாய், குழந்தைகளின் உளவியல் வளர்ச்சியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறாள். மகிழ்ச்சியான மற்றும் சீரான குடும்பத்தை உருவாக்குவதில் தாயின் பங்கு இந்த வகையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைகளின் ஒழுக்கம், உணர்ச்சி சமநிலை, சமூகத் திறன்கள் மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஆகிய அனைத்திலும் தாய் மையப் பங்காற்றுகிறாள். எனவே, தனது சொற்களாலும் செயல்களாலும் குழந்தைகளுக்கு நல்வழி காட்டி, அவர்களைச் சிறந்த மனிதர்களாக உருவாக்கும் வகையில் தாய் செயற்படுதல், ஒரு நிலையானதும் மகிழ்ச்சியானதுமான குடும்ப வாழ்விற்கு அடித்தளமாக அமைகிறது.

### கட்டுப்படுதல், நன்னடத்தை என்ற வகையில் பிள்ளைகள்

முன்மாதிரியான பிள்ளைகள், தங்களது பெற்றோருக்கு பணிவு, மரியாதை மற்றும் அன்புடன் நற்செயல்கள் செய்ய வேண்டிய கடமையுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். ஒரு குழந்தை தாய், தந்தை இருவரின் விருப்பங்களையும் தேவைகளையும் புரிந்து கொண்டு, தனக்குச் செய்த நற்செயல்களுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையில் அன்பான நடத்தையாலும் சேவையாலும் அவற்றை நிறைவேற்றுகிறது. இவ்வகையான அணுகுமுறை, குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதோடு, குழந்தையின் பண்பாட்டுத் தளர்வற்ற வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. ஒரு முன்மாதிரியான குழந்தை, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முழுமையான கட்டுப்பாட்டுடன் நடப்பதோடு, இஸ்லாத்தின் விதிமுறைகளுக்கு

முரணாக அமையாத வரைக்கும் பெற்றோரின் அனைத்துக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து, அவர்களுடன் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் பழக வேண்டும். இஸ்லாமிய போதனைகளின்படி, பெற்றோருக்குச் சேவை செய்வது உயரிய வணக்கச் செயலாகக் கருதப்படுவதுடன், அது அல்லாஹ்வின் திருப்தியை அடையும் வழியாகவும் அமைகிறது.

மேலும், பிள்ளைகளுக்கு தாயின் மீதான கடமை சிறப்பான முக்கியத்துவம் பெற்றதாகும். தந்தையுடன் ஒப்பிடுகையில் கர்ப்ப காலத்தில் குழந்தையை வயிற்றில் சுமத்தல், பிரசவித்தல், பாலூட்டல், வளர்த்தல் ஆகிய அனைத்திலும் தாய் அளிக்கும் தியாகங்கள் அளப்பரியவையாகும். ஆகவே, தாயை மதித்து, அதிக அன்பும் கவனமும் காட்டுதல் பிள்ளைகளின் முதன்மையான கடமைகளில் ஒன்றாகும். உண்மையில், தங்கள் பெற்றோரை மதித்து, அவர்களது உரிமைகளைச் சிறப்பாக நிறைவேற்றும் ஒவ்வொரு பிள்ளையும், தங்களது வாழ்க்கையில் ஆசீர்வாதங்களையும் வெற்றிகளையும் பெறுகின்றனர். இவ்வாறு, முன்மாதிரியான குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தத்தமது பங்கையும் பொறுப்பையும் முறையாக நிறைவேற்றும் போது, அது பரஸ்பர அன்பு, புரிதல் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த ஒரு சிறந்த குடும்பத்தை உருவாக்கும்.

### மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கான நபிகளாரின் வழிகாட்டல்கள்

நபி (ஸல்) அவர்கள் அனைத்துத் துறைகளுக்கும் தமது வாழ்க்கையில் முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள். குடும்ப வாழ்வைப் பொறுத்தவரை அவர்கள் திருமணம் முடித்து மனைவி, குழந்தைகள், உறவினர்கள் என அனைவருடனும் முன்னுதாரணமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள். குடும்ப வாழ்வு தொடர்பான அத்தனை விடயங்களையும் அவர்களது வாழ்வில் முன்மாதிரியாக இந்த சமூகத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். குடும்ப வாழ்வையும் இவ்வுலக விடயங்களையும் புறந்தள்ளிவிட்டு தனிமனிதனாக வாழ்வதை அவர்கள் அனுமதிக்கவுமில்லை. ஒரு முறை நபித்தோழர்கள் மூவர் ஆயிஷா (றழி) அவர்களிடம்

நபி (ஸல்) அவர்களது வாழ்வு முறையை வினவிவிட்டு, ஒருவர் தான் மணமுடிக்காமல் இருக்கப் போவதாகவும், மற்றவர் தான் இரவில் உறங்காமல் நின்று வணங்கப் போவதாகவும், அடுத்தவர் பகலில் உண்ணாது தொடர்ந்து நோன்பு வைக்கப் போவதாகவும் கூறினார்கள். இதனைக் கேட்ட நபியவர்கள் அவர்கள் மூவரையும் அழைத்து "நான் நோன்பும் வைக்கிறேன், அதனை விட்டு விடவும் செய்கிறேன். தொழவும் செய்கிறேன், உறங்கவும் செய்கிறேன். பெண்களை மணமுடித்தும் இருக்கிறேன். யார் எனது வழிமுறையைப் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல" எனக் கூறினார்கள் (புஹாரி : 2063). மேற்படி இந்த செய்தி நபியவர்கள் தானும் குடும்ப வாழ்வில் ஈடுபட்டதோடு ஏனையவர்களையும் அதுதான் தனது வழி என்றும், அதனைப் புறந்தள்ளி வாழ்வது தனது வழிக்குப் புறம்பான செயல் என்றும் உணர்த்தியதைத் தெளிவுபடுத்துகிறது.

அதுமட்டுமல்லாமல் தனது குடும்பத்தாருடன் நபியவர்கள் சிறந்த முறையில் நடந்து கொண்டார்கள். "உங்களில் சிறந்தவர் உங்கள் குடும்பத்தினருக்கு சிறந்தவரே, நான் எனது குடும்பத்தாரிடம் சிறந்தவனாக உள்ளேன் (சுனன் திர்மிதி : 3895) என்ற கூற்று இதற்கு சான்றாக அமைகின்றது. நபி (ஸல்) அவர்கள் தனது மனைவிமார்களோடு புனைப்பெயர் கொண்டு அழைத்து அன்பை வெளிப்படுத்துபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆயிஷா (றழி) கூறினார்கள்: "ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் என்னை யாஆயிஷ் என அழைத்து ஜிப்ரீல் (அலை) அவர்கள் உங்களுக்கு ஸலாம் சொல்கிறார்கள் என்று கூறினார்கள்" (புஹாரி : 6201). முழு சமூகத்திற்கும் வழிகாட்டியாக வந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது மனைவியுடனான உறவுக்கு அழகிய வழிமுறைகளை தமது வாழ்விலேயே முன்மாதிரியாக வழங்கிக் காட்டியிருக்கிறார்கள். மனைவியின் உள உணர்வுகளைப் புரிந்து ஒரு மனைவி தனது கணவனிடம் அடைய விரும்பும் உயர் அந்தஸ்தை தனது மனைவியருக்கு வழங்கினார்கள்.

ஒரு பெரும் சமூகத்திற்கே தலைவராக இருந்த நபியவர்கள் ஒரு சராசரி மனிதனைப் போல உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடியவராகவும், நகைச்சுவை உணர்வுகளை

வெளிப்படுத்துபவராகவும் கணவன் எனும் தனது பாத்திரத்தில் சிறந்து விளங்கியிருக்கிறார்கள். ஆயிஷா (றழி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்களோடு நான் பயணத்தில் இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் சிறியவளாகவும் மெலிந்தவளாகவும் இருந்தேன். எம்மோடு பயணம் மேற்கொண்டவர்களிடம் முன்னே செல்லுமாறு வேண்டிய நபியவர்கள் என்னிடம் "வாருங்கள் நாம் ஓட்டப் பந்தயம் வைப்போம்" எனக் கூறினார்கள். நான் அந்த ஓட்டப் பந்தயத்தில் வெற்றியடைந்தேன். பின்னர் இன்னொரு பிரயாணத்தில் நான் கொழுத்திருந்த நிலையில் ஓட்டப் பந்தயம் வைத்த போது அதில் நபியவர்கள் வெற்றி பெற்றார்கள். அப்போது சிரித்து விட்டு இது அதற்குப் பகரமானது" என நபியவர்கள் கூறினார்கள் (அபூதாவூத் : 2578).

நான் மாதவிடாயில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பாத்திரத்தில் நான் வாய் வைத்து குடித்து எனது எச்சில் பட்ட இடத்தில் நபியவர்கள் தனது வாயை வைத்து அருந்துவார்கள். இறைச்சித் துண்டில் எனது வாய் பட்ட அதே இடத்தில் தனது வாயை வைத்துக் கடிப்பார்கள் என ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் (அபூதாவூத் : 259). கணவன் மனைவிக்கிடையில் அன்பும் பரஸ்பர மரியாதையும் அவசியமானதாகும். மாதவிடாய் என்பது ஒரு பெண்ணின் இயற்கை நிலை என்பதால் அவளை அலட்சியப்படுத்தாது, அதனைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டல் இங்கு வழங்கப்பட்டுள்ளது. நபியவர்கள் தனது மனைவியர்களை மகிழ்விக்க இவ்வாறான செயல்களைச் செய்துள்ளார்கள். அனைத்து சந்தர்ப்பங்களிலும் மனைவியிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பது இஸ்லாத்தில் வழிகாட்டப்பட்ட விடயம் என்பதோடு இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தம்பதியர் இருவர்களுக்கு மத்தியிலும் அன்பும் நெருக்கமும் ஏற்பட்டு வாழ்வில் மகிழ்ச்சிக்கு வித்திடும் என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

## முடிவுரை

குடும்பம் ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமான அலகாகும். இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில், மகிழ்ச்சியான குடும்பம் அன்பு,

கருணை, பொறுப்பு மற்றும் ஆன்மீக ஒழுக்கத்தினால் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களது கடமைகளை புரிந்து, பரஸ்பர மரியாதை மற்றும் பொறுமையுடன் செயற்படும் போது, குடும்ப உறவுகள் நிலையானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் மாறுகின்றன. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரைகள், குடும்பத்தில் அன்பும் சமநிலையும் எப்படி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை விளக்குகின்றன. பெற்றோர் குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இருந்து, அறநெறி, ஒழுக்கம் மற்றும் பொறுப்புமிக்க வாழ்க்கையை கற்பிப்பது முக்கியமாகும். இதன் மூலம் குடும்ப உறுப்பினர்கள் மனநலமும் சமூக நலனும் சேர்க்கும் வலுவான உறவுகளை உருவாக்க முடியும். மகிழ்ச்சியான குடும்பம் என்பது தனிநபர், குடும்பம் மற்றும் சமுதாய நலன்களை இணைத்து, இஸ்லாமிய மதிப்புகளின் வழிகாட்டுதலால் வளரும் வலுவான அமைப்பாகும்.

## உசாத்துணைகள்


- Ahid, N. (2010). *Family education in the Islamic perspective*. Yogyakarta: Pustaka Pelajar.
- Baba, S. (2010). *Keluarga Sakinah: Building a harmonious and happy family in accordance with God's pleasure*. Shah Alam, Malaysia: Alaf 21 Sdn. Bhd.
- Ceria, S. L. (2020). Shari'ah and the development of sakinah family. *Journal of Islamic Legal Studies, 1*(2), 92–122. https://doi.org/10.22219/ulumuddin.v1i2.14925
- Fahrudin, A. (2012). Family functioning: Concept and measurement indicators in research. *Sosio Informa: Kajian Permasalahan Sosial dan Usaha Kesejahteraan Sosial, 17*(2), 77–94. https://doi.org/10.33007/inf.v17i2.94
- Hendrick, S. S. (1988). A generic measure of relationship satisfaction. *Journal of Marriage and the Family, 50*(1), 93–98. https://doi.org/10.2307/352430
- Ismail, A., Malek, R. A. A., Dakir, J., Tibek, S. R., Awal, N. A. M., Sham, F. M., Hamjah, S. H., & Rasit, R. M. (2015). The role of the exemplary family in the formation of a happy family according to Islam. Al-Hikmah, *7*(2), 88–97.
- Lestari, S. (2012). *Family psychology* (p. 3). Jakarta: Kencana.
- Segrin, C., & Flora, J. (2005). *Family communication*. Lawrence Erlbaum Associates.
- Sukeera. (2014). *Atippadai Samukaviyal Ennakkarukkal*. Akkaraippattu: Samooha Arasiyal Padippaham.
- Syaltut, M. (1978). *Comparison of Islamic schools of thought in fiqh manuscripts* (p. 146). Jakarta: Bulan Bintang.
- Wahbah al-Zuhayli. (2005). *Akhlāq al-Muslim ᶜAlāqatuhu bi al-Mujtamaᶜ*. Damascus: Dar al-Fikr.
- Weiss, B., Lavner, J. A., & Miller, J. D. (2018). Self- and partner-reported psychopathic traits' relations with couples' communication, marital satisfaction trajectories, and divorce in a longitudinal sample. *Personality Disorders: Theory, Research, and Treatment, 9*(3), 239–249. https://doi.org/10.1037/per0000233
- Yusuf, A. (2018). The concept of sakinah in Islamic family life. *International Journal of Islamic Studies, 10*(1), 75–89.
- Zuhdi, M. (2008). *Family harmony: Cultivating a happy family*. Selangor, Malaysia: Karya Bestari Sdn. Bhd.


*****